Tamilmanam – International Research Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 3049-0723
pISSN:3107-7781

தமிழ்மணம்
Peer-reviewed · Open access · Google Scholar · Crossref DOI
SJIF Imapact Factor 3.5 · Monthly
Vol. 12, No. 06 (2026) p110–121 TIRJTS-2026-0019
DOI: **10.63300/tmi12n062026.12**

UGC Approved by Transparent Peer Review

RESEARCH ARTICLE

போர்க்கால ஆவணமாகச் சிறுகதை : சுடர் ஒளி பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகளை மையப்படுத்திய ஆய்வு

Short Story as a Wartime Document: A Study of Short Stories Published in the Sudar Oli Newspaper

Paskaran Suman[1,*], Sundaralingam Thamilselvan[1]

[1] Department of Tamil Studies, Faculty of Arts and Culture, Eastern University, Sri Lanka.

***Corresponding author:** Paskaran Suman, sumanp@esn.ac.lk

ARTICLE INFO

Article history
Received: 5 October 2026
Revised: 10 October 2026
Accepted: 15 October 2026

Article ID
TIRJTS-2026-0019

Peer review
Double-blind peer review

Keywords
Sudar Oli
War
War Literature
Displacement

ABSTRACT

The various forms of discrimination and oppression experienced by the Tamil people as a consequence of majoritarian ideologies contributed to the emergence of an armed struggle. This context of armed conflict introduced a new dimension into Eelam Tamil literature, giving rise to what is known as Eelam War Literature. Such war literature was produced by combatant writers, writers who lived within the environment of war, and writers who remained outside the immediate context of the conflict. Newspapers and periodicals played a significant role in providing a platform for the publication of these literary works. Published amidst stringent state censorship and various forms of intimidation, newspapers and periodicals functioned not merely as media for the dissemination of news but also as instruments of struggle. They served as the voice of oppressed communities and as records of the experiences of the period of conflict. Among the newspapers that functioned in this manner was Sudar Oli, published from Colombo. During the period of the Eelam liberation struggle, the newspaper also served as a platform for literary representations related to the war. It provided space for a wide range of literary expressions, including short stories, poetry, drama, novels, and literary research. Against this backdrop, the present study seeks to examine how the short stories published in Sudar Oli functioned as documentary records of the lived experiences and socio-cultural difficulties encountered by Tamils during the period of the struggle. The study focuses on short stories published between 2000 and 2005. It is undertaken around the research problem of how the short stories published in Sudar Oli documented the lived experiences and difficulties faced by Tamils during the period of the Eelam liberation struggle. The study reveals that the short stories published in Sudar Oli documented the impact of war not through the language of macro-level politics, but through the everyday

© 2026 The Author(s) · CC BY 4.0 · OPEN ACCESS DOI: 10.63300/tmi12n062026.12

experiences, suffering, losses, and silent tears of ordinary people. Thus, these short stories serve as significant literary records of the lived realities and human experiences of the wartime period.

How to cite this article: Paskaran Suman, & Sundaralingam Thamilselvan (2026). போர்க்கால ஆவணமாகச் சிறுகதை : சுடர் ஒளி பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகளை மையப்படுத்திய ஆய்வு. *Tamilmanam – International Research Journal of Tamil Studies*, *12*(06), 110–120.
https://doi.org/10.63300/tmi12n062026.12
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

பாஸ்கரன் சுமன்

தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

sumanp@esn.ac.lk

சுந்தரலிங்கம் தமிழ்ச்செல்வன்

தமிழ் கற்கைகள் துறை, கலை கலாசார பீடம், கிழக்குப் பல்கலைக்கழகம்.

thamilselvansuntharalingam@gmail.com

ஆய்வு சுருக்கம்

தமிழர்கள் பேரினவான சிந்தனைகளால் பல்வேறு விதங்களிலும் பாதிப்புற்றமை ஆயுதப் போராட்டம் ஒன்றைத் தோற்றுவித்தது. அந்த ஆயுதப் போராட்டச் சூழல் 'ஈழத்துப் போர் இலக்கியம்' என்ற புதிய பரிணாமத்தை ஈழத்து இலக்கியத்தில் கொண்டு சேர்த்தது. இத்தகு போர் இலக்கியங்கள் போராளிப் படைப்பாளிகளாலும் போர் உலகுக்குள் வாழ்ந்த படைப்பாளிகளாலும் போர் உலகுக்கு வெளியே நின்ற படைப்பாளிகளாலும் படைக்கப்பட்டன. இவர்களது படைப்புகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்ததில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் பங்கு குறிப்பிடத்தக்கது. அரசின் கடும் தணிக்கைகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வெளிவந்த பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெறும் செய்திப் பரிமாற்ற ஊடகமாக அல்லாது, போராட்டக் கருவிகளாகவும் இயங்கின. அவை ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும் போராட்டக் காலத்தின் பதிவேடாகவும் விளங்கின. அவ்விதமாக செயற்பட்ட பத்திரிகைகளில் ஒன்றே கொழும்பிலிருந்து வெளிவந்த சுடர் ஒளி. அப்பத்திரிகை ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் போர்சார்ந்த இலக்கியப் பதிவுகளுக்கான களமாகவும் இயங்கியது. அப்பத்திரிகை சிறுகதை, கவிதை, நாடகம், நாவல், இலக்கிய ஆராய்ச்சிகள் ஆகிய இலக்கியம் சார்ந்த விடயப்பரப்பிற்கும் இடங்கொடுத்திருந்தது. இந்நிலையில், போராட்ட காலத்தில் தமிழர் எதிர்கொண்ட வாழ்வியல் சிக்கல்களின் ஆவணமாக சுடர் ஒளி பத்திரிகையில் வெளிவந்த கதைகள் விளங்குமாற்றினை எடுத்துரைக்க இவ்வாய்வு

முயலுகிறது. அத்தகு ஆய்வானது 2000 - 2005 ஆம் ஆண்டுவரை வெளிவந்த சிறுகதைகளை அடிப்படையாகக் கொள்கிறது. ஈழ விடுதலைப் போராட்ட காலத் தமிழரின் வாழ்வியல் சிக்கல்களை சுடர் ஒளிப் பத்திரிகையில் வெளிவந்துள்ள சிறுகதைகள் எவ்விதம் பதிவுசெய்துள்ளன என்னும் ஆய்வுப் பிரச்சினையை முன்வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சுடர் ஒளியில் வெளிவந்த சிறுகதைகள், போரின் தாக்கத்தைப் பெருநிலை அரசியல் மொழியில் அல்லாது, சாதாரண மனிதர்களின் அன்றாட அனுபவங்கள், வலிகள், இழப்புகள் மற்றும் மௌனக் கண்ணீரின் வழியாகப் பதிவுசெய்துள்ளமை ஆய்வின் வாயிலாகக் கண்டறியப்பட்டுள்ளது.

திறவுச் சொற்கள் : சுடர் ஒளி, போர், போரிலக்கியம், இடப்பெயர்வு.

அறிமுகம்

தமிழர்கள் பேரினவான சிந்தனைகளால் பல்வேறு விதங்களிலும் பாதிப்புற்றதன் விளைவினால் ஆயுதப் போராட்டம் தொடங்கியது. அந்த ஆயுதப் போராட்டச் சூழல் ஈழத்துப் போர் இலக்கியம் என்ற புதிய பரிணாமத்தை ஈழத்து இலக்கியத்தில் கொண்டு சேர்த்தது. அந்தப் போர் இலக்கியங்கள் போரின் துன்பியல் பதிவுகளாகவும் நீதிக்கான குரலாகவும் போராட்டச் சிந்தனைகளை விதைப்பனவாகவும் எதிர்கால நம்பிக்கைகளை எடுத்துரைப்பனவாகவும் விளங்கின. இத்தகு போர் இலக்கியங்கள் போராளிப் படைப்பாளிகளாலும் போர் உலகுக்குள் வாழ்ந்த படைப்பாளிகளாலும் போர் உலகுக்கு வெளியே நின்ற படைப்பாளிகளாலும் படைக்கப்பட்டன. இவர்களது படைப்புகளுக்குக் களம் அமைத்துக் கொடுத்ததில் பத்திரிகைகள், சஞ்சிகைகள் ஆகியவற்றின் பங்கு குறிப்பிடத்தக்கது. அரசின் கடும் தணிக்கைகள் மற்றும் அச்சுறுத்தல்களுக்கு மத்தியில் வெளிவந்த பத்திரிகைகளும் சஞ்சிகைகளும் வெறும் செய்திப் பரிமாற்ற ஊடகமாக அல்லாது, போராட்டக் கருவியாகவும் இயங்கின. அதனால், போர்க் காலப் பத்திரிகைகள், சஞ்சிகைகள் என்றுகூட அவற்றை அடையாளப்படுத்தலாம். அவை ஒடுக்கப்பட்ட மக்களின் குரலாகவும் போராட்டக் காலத்தின் பதிவேடாகவும் விளங்கின. அவ்விதமாக செயற்பட்ட பத்திரிகைகளில் ஒன்றே கொழும்பிலிருந்து வெளிவந்த சுடர் ஒளி. அப்பத்திரிகை ஈழ விடுதலைப் போராட்ட காலத்தில் போர்சார்ந்த இலக்கியப் பதிவுகளுக்கான களமாகவும் இயங்கியது. 2000ஆம் ஆண்டு வார இதழாகத் தொடங்கப்பட்ட சுடர் ஒளி பத்திரிகை, 2001 அக்டோபர் முதல் நாளிதழாக மாற்றம் கண்டது. அப்பத்திரிகை சிறுகதை, கவிதை, நாடகம், நாவல், இலக்கிய ஆராய்ச்சிகள் ஆகிய இலக்கியம் சார்ந்த விடயப்பரப்பிற்கும் இடங்கொடுத்திருந்தது. போராட்ட காலத்தில் தமிழர் எதிர்கொண்ட வாழ்வியல் சிக்கல்களின் ஆவணமாக சுடர் ஒளி பத்திரிகையில் வெளிவந்த கதைகள் விளங்குமாற்றினை எடுத்துரைக்க இவ்வாய்வு முயலுகிறது.

அத்தகு ஆய்வானது 2000 - 2005 ஆம் ஆண்டுவரை வெளிவந்த சிறுகதைகளை அடிப்படையாகக் கொள்கிறது.

இலக்கிய மீளாய்வும் ஆய்வு முறையியலும்

ஈழத்துச் சிறுகதை வளர்ச்சியில் பத்திரிகைகள், சஞ்சிகைகளின் பங்களிப்பு குறித்த பல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ளன. இருப்பினும், இறுதி யுத்த காலத்தில் வெளிவந்த சுடர் ஒளி பத்திரிகை பற்றியோ சுடர் ஒளி பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகளை மையப்படுத்தியோ எவ்வித ஆய்வுகளும் இதுவரை வெளிவரவில்லை. ஆதலால், சுடர் ஒளி பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகளை மையப்படுத்திய முன்னோடி ஆய்வு முயற்சியாக இந்த ஆய்வே அமைகின்றது. அத்தகு ஆய்வானது 2000 – 2005ஆம் ஆண்டுகளுக்குள் வெளிவந்த அம்மாவுக்குத் தாலி (2000), தாயுள்ளம் (2001), அது ஒரு காவியம் (2001), எங்கள் தேசத்தின் சங்கதி (2001), பொற்பால் (2001), தொலைபேசி (2001), ஊருக்குப் போகிறேன் (2001), அமைதிப்படை (2001), சொந்தமண் (2001), விதி (2001), அண்ணனின் பாதச் சுவட்டிற்காக (2004), அலை தேடும் கரை (2004), சின்னம் (2004), அகதி (2004), தொடக்கமா? முடிவா? (2004), கடந்த காலங்கள் (2004), அந்த அர்த்தமுள்ள அனர்த்தங்கள் (2004), அகதி (2004), துன்பம் சுமையாகி (2004), காதல் சொல்ல வந்தேன் (2005), பிறந்தநாள் (2005), தாய் மடி (2005), பவளக்கொடி (2005), ஒரு தமிழனின் கதை (2005), பூட்டாத பூட்டுக்கள் (2005), அன்பைத் தேடி (2005) ஆகிய சிறுகதைகளை முதன்மை ஆதாரங்களாகவும் போர் இலக்கியங்கள், ஈழத்துச் சிறுகதை வளர்ச்சி முதலானவை குறித்து வெளிவந்த ஆய்வுக் கட்டுரைகள், நூல்கள் ஆகியவற்றைத் துணை ஆதாரங்களாகவும் கொண்டு மேற்கொள்ளப்படுகிறது. ஈழ விடுதலைப் போராட்ட காலத் தமிழரின் வாழ்வியல் சிக்கல்களை சுடர் ஒளி பத்திரிகையில் வெளிவந்துள்ள சிறுகதைகள் எவ்விதம் பதிவுசெய்துள்ளன என்னும் ஆய்வுப் பிரச்சினையை முன்வைத்து இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இச்சிறுகதைகளை ஈழத்தின் மூத்த படைப்பாளிகளும் இளம் படைப்பாளிகளும் தம் முதற் சிறுகதையை சுடர் ஒளியின் மூலமாக வெளிப்படுத்திய படைப்பாளிகளும் படைத்திருந்தனர். அம்மாவுக்கு தாலி (நீ.பி.அருளானந்தம்), தாயுள்ளம் (காவலூரான்), அது ஒரு காவியம் (சுதாரஞ்சன்), எங்கள் தேசத்தின் சங்கதி (நீ.பி.அருளானந்தம்), பொற்கால் (பிரபா), தொலைபேசி (சி.சிவாணி), ஊருக்குப் போகிறேன் (சுதாரஞ்சன்), அமைதிப்படை (தனேஸ்), சொந்தமண் (இ.பொன்னம்பலம்), விதி (றேணுகா), அண்ணனின் பாதச் சுவட்டிற்காக (சி.நடனசபேசன்), அலை தேடும் கரை (எஸ். கவிதரன்), சின்னம் (ஏழுமலை மூவேந்தன்), தொடக்கமா? முடிவா? (செம்பியன் புதல்வன்), கடந்த காலங்கள் (மு.வ.சுதா), அந்த அர்த்தமுள்ள அனர்த்தங்கள் (எஸ்.சிவம்), அகதி (பாபு), துன்பம் சுமையாகி (பாபு), காதல் சொல்ல வந்தேன் (வ.சுதா), பிறந்தநாள் (ஆனந்தவள்ளி), பவளக்கொடி (ப.அம்பிகாபதி), ஒரு தமிழனின் கதை

(பாலா சங்குப்பிள்ளை), பூட்டாத பூட்டுக்கள் (சந்திரகாந்தா), அன்பைத் தேடி (ஏழுமலை மூவேந்தன்) ஆகியோர் தமது படைப்புகளை வழங்கியிருந்தனர்.

இந்த ஆய்வாய்வானது விவரணம், பகுப்பாய்வு ஆகிய ஆய்வு முறையியல்களையும் உளவியல், வரலாற்றியல் ஆகிய ஆய்வு அணுகுமுறைகளையும் கைக்கொண்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது. 2000 – 2005 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் சுடர் ஒளி பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளன. அச்சிறுகதைகளில் பாத்திரங்களின் மனநிலையை உளவியல் ரீதியாக ஆய்வு செய்வதற்கு உளவியியல் அணுகுமுறையும், படைப்பு உருவான காலத்தின் அரசியல், கலாசார சூழமைவினை ஆராய்வதற்கு வரலாற்றியல் அணுகுமுறையும் கைக்கொள்ளப்பட்டுள்ளன. சிறுகதைகளில் பதிவாகிய போராட்ட காலத்து வாழ்வியல் சிக்கல்களைப் பகுத்தாய பகுப்பாய்வு முறையியலும் அச்சிக்கல்களை விவரிப்பதற்கு விவரண முறையியலும் கைக்கொள்ளப்பட்டுள்ளன.

கலந்துரையாடலும் ஆய்வு முடிவுகளும்

சுடர் ஒளியில் வெளிவந்த போராட்ட காலத்துச் சிறுதைகள் விடுதலைப் போர் காரணமாக ஏற்பட்ட அவலங்களையே பேசுபொருளாகக் கொண்டுள்ளன. வதிவிடப் பிரச்சினை, உயிர் இழப்பு, பொருளாதார இழப்பு, உளவியல் பாதிப்புகள், உறவுகளின் சிதைவு, பெண்களின் அவலம், போர் அரசியல், அடையாளச் சிதைவு, புலம்பெயர்வு அவலங்கள் போன்ற விடயங்களைப் பேசுகின்றன. அந்த அடிப்படையில் அவை போர்க்கால ஆவணங்களாக வெளிப்படுகின்றன.

உயிர் இழப்பும் தொடரும் துயரமும்

போர் முனையில் நிகழும் வீரமரணங்களைவிட, போர்க்களத்துடன் சம்மந்தப்படாத அப்பாவிப் பொதுமக்களின் உயிரிழப்புக்களே சிறுகதைகளில் பெரிதும் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இந்த உயிரிழப்புக்கள் தனிமனித இழப்புக்கள் மட்டுமல்ல, அவை ஒரு சமூகத்தின் எதிர்காலத்தையே கேள்விக்குறியாக்கும் சிதைவுகள். ஒரு குடும்பத்தின் நிலைத்தன்மை என்பது அதன் அன்பு, பொருளாதாரம், பாதுகாப்பு, எதிர்கால நம்பிக்கை ஆகிய அனைத்தையும் ஒருங்கே தாங்கி நிற்கும் சில முக்கிய தூண்களின் மேல் அமைகிறது. குடும்பத்தின் பிரதான தூணாக விளங்குபவர் தந்தை அல்லது கணவன். போர்ச் சூழலில் இத்தூண் சிதைக்கப்படும்போது, அது ஓர் உயிரின் இழப்பாக முடிவதில்லை. மாறாக, அது ஒரு குடும்பத்தின் முழு வாழ்வியல் கட்டமைப்பே இடித்து வீழ்த்துகிறது. அந்த அர்த்தமுள்ள அனர்த்தங்கள், கடந்த காலங்கள், தாய்மடி, அகதி ஆகிய கதைகளில் இத்தகைய பதிவுகளை அவதானிக்கலாம்.

யுத்தம் ஒரு நொடியில் குடும்பத்தின் தூண்களைச் சாய்த்துவிடும் என்பதற்கு எஸ்.சிவத்தினுடைய 'அந்த அர்த்தமுள்ள அனர்த்தங்கள்' என்ற சிறுகதையில் வரும் நந்தினியின் தந்தை குண்டுவீச்சில் பலியானதே சாட்சியாகும். தந்தையை இழந்த அதிர்ச்சியில் தாய் பக்கவாத நோய்க்கு ஆளாகி இறப்பது, போரின் மறைமுகத் தாக்கத்தைக் காட்டுகிறது. மிதிவெடி அனர்த்தத்தால் பானுவின் வலது கால் பொறிவெடியில் சிதைவது காட்டப்பட்டுள்ளது. இந்த விபத்து போர்க்காலத்தில் அப்பாவிச் சிறுவர்கள் எதிர்கொண்ட ஆபத்தை விளக்குகிறது.

'கடந்த காலங்கள்' என்ற சிறுகதை போர்ச் சூழலில் மீனவக் குடும்பங்கள் எதிர்கொண்ட துயரங்களையும் வலியையும் பதிவுசெய்கிறது. முல்லைத்தீவிலிருந்து இடம்பெயர்ந்து பொக்கணைப் பகுதியில் வாழ்ந்து வரும் ஜெனா என்ற பெண்ணின் வாழ்க்கையை இக்கதை விவரிக்கிறது. 1998இல் நடந்த விமானத் தாக்குதலில் ஜெனா தம்பியைப் பறிக்கொடுக்கிறார். தந்தையும் காயமுறுகிறார். வறுமைக்கும் சோகத்திற்கும் இடையில் ஜெனா வாழ்கிறாள். பின்னர் சுரேஸ் என்பவனைக் காதலித்து மணம் முடிக்கிறாள். ஒரு நாள் அதிகாலை தொழிலுக்குச் சென்ற சுரேஸ், கடற்படையின் தாக்குதலில் கொல்லப்படுகிறான். தம்பி, கணவன் எனத் தனது வாழ்வின் ஆதாரங்களை இழந்து நிற்கும் ஜெனா, மீண்டும் சொந்த மண்ணான முல்லைத்தீவுக்குத் திரும்பினாலும், நிச்சயமற்ற எதிர்காலத்தோடு வாழ்வதையே அக்கதை சித்திரிக்கிறது. போர்க்காலத்தின் கொடூரம் ஒரு சாதாரண மீனவக் குடும்பத்தின் கனவுகளை எவ்வாறெல்லாம் சிதைக்கிறது என்பதை ஜெனாவின் தம்பி மற்றும் கணவனின் மரணங்கள் காட்டுகின்றன.

எதிர்காலத் தூண்களாகக் கருதப்படும் சிறுவர்களும் இளையர்களும் போரின் கொடூரத்திற்கு இரையாவது பெரும் வடுவாகும். 'அகதி' சிறுகதையில் கணவனையும் மகனையும் ஒரே நாளில் இழந்த ஒரு தாயின் நிலையைப் பின்வருமாறு விவரிக்கிறார், கதாசிரியர்:

ஒரே நாளில் பரிமளம் தனது கணவனையும் கடைசி மகனையும் இழந்த இழப்பு இனி சீர் செய்ய முடியாததுதான் மூத்தவளும் தாய் பரிமளமும் தங்கள் தகப்பன் உடல் மீது புரண்டு கொண்டிருந்தனர். பெண்பிள்ளைகள் இரண்டும் சுமைகளையும் சுமந்து கொண்டு விம்மிக் கனத்த மனதுடன் ஆக வேண்டிய காரியங்களைக் கவனித்துக் கொண்டிருந்தனர். ஜ.சி.ஆர்.சியின் உதவியுடன் மரணச் சடங்குகள் நடந்து முடிந்தன (சுடர் ஒளி., 2004.8.16-22:14).

'தாய்மடி' என்ற சிறுகதை ஈழப்போரின் வடுக்களையும் அதனால் ஏற்பட்ட புலம்பெயர்வு, இழப்பு, குடும்ப உறவுகளின் சிதைவு ஆகியவற்றையும் மிகவும் உருக்கமாகச் சித்திரிக்கிறது. அப்பாவிப் பெண்ணான வீணா ஷெல்வீச்சில் கொல்லப்படுவது போரின் கொடூர முகத்தைக் காட்டுகிறது. 'கருகிய மொட்டுப் போல

அழிந்து போனாள்' என்ற கூற்று போரில் ஈவிரக்கமற்று கொல்லப்பட்டமையை உணர்த்துகின்றது. 'ஒரு தமிழனின் கதை' என்ற சிறுகதையில் திருக்கேதீஸ்வரன் சுட்டுக் கொல்லப்படுவது, வதனி மற்றும் கமலினி பாழுங்கிணற்றில் பிணமாகக் கண்டெடுக்கப்படுவது ஆகிய காட்சிகள் போரின் ஈவிரக்கமற்ற தன்மையைக் காட்டுகின்றன. உயிர் இழப்புகளுக்கு இணையாக, போரினால் ஏற்படும் உடல் ஊனங்கள் மனிதரை உயிரோடு பிணங்களாக்குகின்றன.

இந்தச் சிறுகதைகள் ஈழத்து நிலப்பரப்பில் நிகழ்ந்த உயிர் இழப்புக்களை வெறும் புள்ளிவிவரங்களாகப் பார்க்காமல், அவை ஏற்படுத்திய வாழ்வியல் வலிகளாகப் பதிவுசெய்துள்ளன. இந்த உயிர் இழப்புகள் ஈழத் தமிழர்களின் வரலாற்றில் என்றும் ஆறாத வடுக்களாகவும் அவர்களின் நீதிக்கான குரலாகவும் சிறுகதைகளின்வழி ஒலித்துக்கொண்டே இருக்கின்றன.

இடப்பெயர்வு

முப்பது ஆண்டுகளாகத் தொடர்ந்த போர் ஈழத் தமிழர்களின் இருப்பைக் கேள்விக்குள்ளாகியது. பூர்விக நிலத்திலிருந்து வேரோடு பிடுங்கப்பட்ட மக்கள், தற்காலிக தங்குமிடங்களில் சந்தித்த அவலங்களும் அவர்கள் உயிரென நேசித்த வாழ்விடங்கள் சிதைக்கப்பட்ட துயரமும் சிறுகதைகளில் ஆழமாகப் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அகதி, கடந்த காலங்கள், அந்த அர்த்தமுள்ள அனர்த்தங்கள், காதல் சொல்ல வந்தேன், ஆனந்த வள்ளி, பிறந்தநாள் ஆகிய கதைகள் அவ்வகையில் கவனிப்புக்குரியன.

பாபுவின் 'அகதி' என்னும் சிறுகதை வறுமையும் இடப்பெயர்வுமே வாழ்வாகக் கொண்ட சிவஞானம் பரிமளம் குடும்பத்தைக் காட்சிப்படுத்துகிறது. அகதி முகாம் பகுதியில் ஓட்டைக் குடிசையில் வாழ்வதும் மழைக் காலங்களில் பள்ளிக்கூடத்தில் தஞ்சம் புகுவதும், தன் சொந்த மண்ணுக்குச் செல்ல மாட்டோமா என்று ஏங்கும் இளைய மகன் பற்றி சித்திரிப்பும் வாழ்விட இழப்பின் துயரையும் இடம்பெயர் வாழ்வின் இன்னலையும் எடுத்துரைக்கின்றன. எஸ்.சிவம் எழுதிய 'அந்த அர்த்தமுள்ள அனர்த்தங்கள்' என்ற சிறுகதையில், இராணுவ நகர்வுகளால் மக்கள் மாங்குளத்திலிருந்து கிளிநொச்சிக்கும், அங்கிருந்து கொழும்புக்கும் அகதிகளாக ஓடும் நிலை விவரிக்கப்பட்டுள்ளது. போர், மக்களை ஒரே இடத்தில் நிலைபெற விடாமல் துருவங்களாகச் சிதறடித்தது. இலங்கையின் போர்ச் சூழல் காரணமாக யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்கு இடம்பெயர்ந்து, அங்கிருந்து வாழ்வாதாரத்திற்காகப் பிள்ளையை வெளிநாட்டிற்கு அனுப்பும் யதார்த்தம் 'அம்மாவுக்கு தாலி' என்ற கதையில் பதிவாகியுள்ளது. வ.சுதாவின், 'காதல் சொல்ல வந்தேன்' என்ற சிறுகதை, போரினால் மக்கள் இடம்பெயர்ந்து சென்றதையும், காலம் கடந்த பின் மீண்டும் தமது வேர்களைத் தேடி வருவதையும் காட்டுகிறது. 'பிறந்தநாள்'

என்ற சிறுகதையில், கையில் அகப்பட்ட பொருட்களைத் தூக்கிக்கொண்டு, 'ஊரோடு ஊராய் சனத்தோடு சனமாய்' இடம்பெயரும் அவலம் விவரிக்கப்பட்டுள்ளது. சொந்த மண்ணை விட்டகன்று முன்பின் அறியாத ஊரில் அகதிகளாகத் தஞ்சமடையும் பெரும் துயரினை 'ஆனந்தவள்ளி' சிறுகதையில் காணமுடிகின்றது.

சுடர் ஒளியில் வெளிவந்த சிறுகதைகளிற் சில, 'சிதைக்கப்பட்ட கனவுகளின் இடிபாடுகளாக'க் காட்சியளிக்கின்றன. ஊரோடு ஊராய் சனத்தோடு சனமாய் இடம்பெயரும் அவலமும் தங்களின் பூர்விக நிலத்தைத் தொலைத்துவிட்டு அந்நிய மண்ணில் வேரற்றுத் தவிக்கும் நிலையையும் சித்திரிக்கின்றன. அத்தோடு, இந்த வாழ்விடச் சிதைவு என்பது வெறும் பொருளாதார இழப்பல்ல. அது ஒரு இனத்தின் கலாசார, சமூக மற்றும் உளவியல் ரீதியான பெறும் வீழ்ச்சியுமாகும் என்பதனை இக்கதைகள் உணர்த்துகின்றன.

பொருளாதார வீழ்ச்சியும் வாழ்வாதார மாற்றங்களும்

யுத்தம் மனிதனின் வசிப்பிடத்தை மட்டுமல்ல, அவனது பொருளாதாரத்தையும் சேர்த்துச் சிதைக்கிறது. செல்வச் செழிப்புடன் வாழ்ந்த குடும்பங்கள் போரின் காரணமாக, ஒரே இரவில் அகதி முகாம்களிலும் தற்காலிக குடியிருப்புக்களிலும் தஞ்சமடையும் அவலத்தையும் பட்டினியால் வாடி உருக்குலைந்து போன துயரையும் சிறுகதைகள் மிகத் துல்லியமாகப் பதிவுசெய்துள்ளன. செம்பியன் புதல்வனின் 'தொடக்கமா? முடிவா?' என்ற சிறகதையில் செல்வச் செழிப்புடன் வாழ்ந்த குடும்பம் அனைத்தையும் இழந்து மூன்று வேளையும் கஞ்சி குடித்துக் காலங்கடத்திய நிலை பதிவாகிறது. ஈழத்து இடப்பெயர்வு வரலாற்றில் வறுமையின் உச்சத்தை இக்கதை பதிவுசெய்கிறது.

வறுமையிலிருந்து மீளவும் குடும்பத்தைக் காப்பாற்றவும் இளையர்கள் வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுவது ஈழத்து வாழ்வியலின் ஒரு கட்டாயமான கலாசாரமாக மாறியது. 'தாய்மடி' என்ற சிறுகதையில் தந்தையின் உழைப்பை மட்டும் நம்பி இருக்க முடியாது என்ற சூழலில், விக்ரம் குடும்பத்தை நன்னிலைக்குக் கொண்டுவர வெளிநாடு செல்கிறான். ஆசைப்பட்டுச் செல்பவர்களைவிட, வேறு வழியின்றி பாதுகாப்புத் தேடியும் வறுமைக்காகவும் வெளியேறுபவர்களின் பிரதிநிதியாக விக்ரம் கதையில் சித்திரிக்கப்படுகிறான்.

எனக்கு இருக்கிறது இரண்டு பிள்ளையள். அதுல ஒண்ட கண்காணாத தூரத்தில் விட்டுட்டு... சரி என்னவோ உங்கட விருப்பப்படி செய்யுங்கோ என அனுமதி கொடுத்தார் சுந்தரம். அப்பாவின் அனுமதி கிடைத்தவுடன் விக்ரம் வெளிநாட்டுக்குப் போவதற்கான ஆயத்தங்கள் வேகமாக நடந்தன. விக்ரம் போகும் காலமும் வந்தது.

எனக்குக் கல்யாணம், சீதனம் அது இதெண்டு நீ வெளிநாட்டுக்கு போக வேண்டாம் அண்ணா. இஞ்ச இருந்த மாதிரி கஞ்சியோ கூழோ குடித்துக்கொண்டு சந்தோசமாய் இருப்போம். ஏன் வீணா கண்ணீரோடு கூறினாள். இல்ல வீணா நான் போய்த்தான் ஆக வேணும். அப்பா பாவம். உழைச்சு ஓடமாய் போய் விடுவார் எனக் கூறி, தங்கையிடத்தும் தாய், தந்தையிடத்தும் விடைபெற்றுப் பிரிவென்ற சோகத்தை நெஞ்சில் சுமந்தபடி தன் தாய்நாட்டைப் பிரிந்தான் (சுடர் ஒளி.,2005.3.13-19:4).

உளவியல் பாதிப்புகளும் உறவுகளின் சிதைவும்

யுத்தமும் அதன் தொடர் விளைவான இடப்பெயர்வும் ஒரு சமூகத்தின் புறவயமான வாழ்க்கையை மட்டமல்லாது, அகவயமான உளவியலையும் கடுமையாக பாதிக்கிறது. சொந்த மண்ணிலிருந்து வேரருக்கப்படுதல், உறவுகளைப் பலிகொடுத்தல், போர் வடுக்களுடன் வாழ்தல் போன்றவை ஈழத்துத் தமிழர்களிடையே தீராத மன உளைச்சலை ஏற்படுத்தியுள்ளன. இந்தப் பாதிப்புக்கள் எவ்வாறு உறவுகளுக்குள் விரிசலையும் தனிமனித மனங்களில் மாற்றத்தையும் ஏற்படுத்தின என்பதை சுடர் ஒளி சிறுகதைகளின் ஊடாக காணமுடிகின்றது.

சொந்த மண்ணில் நிலபுலன்களுடன் கௌரவமாக வாழ்ந்தவர்கள், இடப்பெயர்ந்த இடத்தில் அகதி என்ற ஒற்றைச் சொல்லால் அழைக்கப்படும்போது ஏற்படும் மன உளைச்சல் பொறுத்தற்கரிது. சொந்த மண்ணில் கௌரவமாக வாழ்ந்தவர்கள், மற்றவர் இடத்தில் அகதி என்ற சொல்லோடு வாழ்வது அவர்களுக்குள் பெரும் மன உளைச்சலை ஏற்படுதியமையை 'அகதி' என்ற சிறுகதையில் தரிசிக்க முடிகிறது. குறிப்பாக, பிள்ளைகளின் மனத்தில் இது ஆழமான வடுக்களை ஏற்படுத்துகிறது.

எப்பதான் இந்த நாட்டுக்குச் சமாதானம் வரப்போகுது. நாசமறுவானுகள் எங்கட மண்ண ஆட்சி செய்ய, நாங்க அகதிகள் எண்டு இடம்பெயர்ந்து அகதி முகாம் எண்டும், ஓட்டைக் குடிசை எண்டும் வாழ வேண்டிக்கிடக்குது. இவனுகள் அவனுகள் இடத்துக்குப் போனா, அவனுகளும் குடும்பத்தோட சந்தோசமாய் வாழலாம். நம்மளும் நம்மட மண்ணும், சாதி சனங்களோட சொந்த வீட்டிலே சுகமாய் வாழலாம் தானே என்று பரிமளம் புலம்பிக் கொண்டாள் (சுடர் ஒளி.,2004.8.16-22:14).

போரின் காட்சிகள் மனிதர்களின் ஆழ்மனதில் படிந்து அவர்களின் அமைதியைச் சிதைக்கின்றன. உயிரிழப்பு, அழுகுரல்கள், அழிவு போன்ற அனுபவங்கள் பயம், பதற்றம், துயரம் ஆகிய மன அழுத்தங்களை உருவாக்கி நினைவுகளில் நீங்காத காயங்களை ஏற்படுத்துகின்றன. 'அந்த அர்த்தமுள்ள அனர்த்தங்கள்' என்ற சிறுகதையில், விண்ணில் மேகங்களுக்குப் பதிலாக குண்டுகள் மோதுவது, எங்கும் ஷெல் ஓசை, அழுகிய கால்நடைகளின் துர்நாற்றம் என நந்தினியின் நினைவுகளில் படிந்துள்ள காட்சிகள் போர்க்காலத்தின் பயங்கரத்தை வாசகர்களுக்கும் கடத்துகின்றன.

புலம்பெயர்ந்து சென்று மீளவும் சொந்த மண்ணுக்குத் திரும்பும்போதுகூட அந்த மண் அவர்களுக்குப் பாதுகாப்பானதாக இருப்பதில்லை. நீ.பி. அருளானந்தத்தின் 'எங்கள் தேசத்தின் சங்கதி' என்ற கதையில் போர்ச் சூழல் மற்றும் பாதுகாப்பு குறித்த 'அந்நியப்பட்ட நிலை' மற்றும் 'பயம்' என்பன முதன்மையாகப் பேசப்படுகின்றன.

பாட்டி மற்றும் அம்மா சுதாகரனை வெளியே செல்ல வேண்டாம் எனத் தடுக்கின்றனர். நிலக்கண்ணி வெடிகள் மற்றும் அமுக்க வெடிகள் பற்றிய பயம் அவனது சுதந்திரத்தை முடக்குகிறது. 'மிதிவெடி அமுக்கவெடி இப்படியெல்லாம் இன்னமும் இருக்குதாமே' என்ற அவனது யோசனை புகலிடத்து அமைதிக்கும் தாயகத்து ஆபத்துக்கும் இடையிலான வேறுபாட்டைக் காட்டுகிறது (சுடர் ஒளி.,2001.11.4:11).

இந்தக் கதைகள் காட்டும் உளவியல் தரிசனங்கள் போரின் கோரத்தை அடுத்த தலைமுறைக்குக் கடத்தும் வலி மிகுந்த ஆவணங்களாகும்.

தமிழர் கல்வி எதிர்கொண்ட சவால்கள்

ஈழத்து வாழ்வியலில் கல்வி என்பது வெறும் வாழ்வாதார மார்க்கம் மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் இருப்பையும் கௌரவத்தையும் தக்க வைக்கும் ஆயுதமுமாகும். யுத்தம் மற்றும் இடப்பெயர்வு காரணமாகப் பாடசாலைகள் சிதைக்கப்பட்டும் கற்றல் காலம் திருடப்பட்டும் இருந்த நிலையிலும் மாணவர்கள் கல்விக்காக காட்டிய அர்ப்பணிப்பு மகத்தானது. தொடர்ச்சியான இடம்பெயர்வுகள் மாணவர்களின் மன ஒருமையைக் குலைத்து அவர்களின் கல்வி இலக்குகளைச் சிதைத்தன.

'தொடக்கமா? முடிவா?' சிறுகதையில் சிவா நெடுங்கேணியிலிருந்து இடம்பெயர்ந்ததால் கல்வியில் கவனம் செலுத்த முடியாமல் தோல்வியடைகிறான். அதே சமயம், வதனி போன்ற கதாபாத்திரங்கள் அந்த வறுமைக்கும் இடப்பெயர்வுக்கும் மத்தியிலும் கல்விதான் விடுதலை தரும் என்ற நோக்கில் விடாமுயற்சியுடன் கற்பது, இடப்பெயர்வு வாழ்வின் இருண்ட பக்கங்களுக்கு இடையிலும் எரியும் ஒரு சிறு ஒளிக்கீற்றாகத் தெரிகிறது. போரும் இடப்பெயர்வும் ஒரு தலைமுறையின் கற்றல் காலத்தைத் திருடினாலும், அந்த மக்கள் கல்வியை ஒரு தற்காப்புக் கருவியாகவே கருதிய பண்பு இங்குக் குறிப்பிடத்தக்கது. இட நெருக்கடி மற்றும் அடிப்படை வசதிகளற்ற தற்காலிக குடியிருப்புக்கள் மாணவர்களின் கற்றல் திறனைப் பாதிக்கும் பெரும் காரணிகளாக இந்தக் கதையில் சுட்டிக்காட்டப்படுகின்றன.

போர்க் கால நெருக்கடிகளும் அடையாளச் சிதைவுகளும்

ஈழத்துச் சிறுகதைகள் போரின் நேரடி அழிவுகளைப் பேசுவதோடு மட்டுமல்லாமல், போரினால் ஏற்பட்ட நீண்ட காலக் கட்டமைப்புச் சிதைவுகளையும் நுட்பமாகப் பதிவுசெய்கின்றன. குறிப்பாக மருந்துத் தடைகள், இராணுவக் கண்காணிப்புக்கள்

முதலானவை ஓர் இனத்தின் வாழ்வியலை எவ்வாறு மாற்றியமைத்துள்ளன என்பதைச் சிறுகதைகள் எடுத்துரைத்துள்ளன.

போர்க் காலத்தில் அரசு விதித்த மருத்துவப் பொருட்கள் மீதான தடை சாதாரண நோய்களைக்கூட மரணங்களாக மாற்றியுள்ளது. 'பூட்டாத பூட்டுக்கள்' என்ற சிறுகதையில், 'அம்மா ஷெல் அடிபட்டு இறந்தபோது ஒரு வைத்தியர் இருந்திருந்தால் காப்பாற்றியிருக்கலாம்' என்ற கூற்று, போர்ச் சூழலில் ஒரு மருத்துவரின் தேவை எவ்வளவு முக்கியமானது என்பதை உணர்த்துகிறது. போர்க்காலத்தில் அரசு விதித்த மருந்துப் பொருட்கள்மீதான தடை எத்தகைய பாதிப்பை ஏற்படுத்தியது என்பதற்கு ஆனந்தவள்ளியின் 'பிறந்தநாள்' என்ற சிறுகதையில் வரும் அம்பிகையின் மரணமே சாட்சி. ஒரு திறமையான வருங்கால மருத்துவர், சாதாரண காய்ச்சலுக்கு மருந்து கிடைக்காமல் இறந்துபோவது போரின் மிக மோசமான முகமாகும்.

பரீட்சையும் முடிந்து பெறுபேறுகள் வெளியாகும் நாளும் வந்தது. கிளிநொச்சி மாவட்டத்தில் முதல் நிலையையும் அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தையும் அம்பிகை பெற்றிருந்தாள். ஆனால் ..... சந்தோசத்தைக் கொண்டாட அண்ணனின் நெஞ்சில் குத்திக் குத்திக் கதைபேசும் அந்தத் தங்கை இந்த மண்ணில் இல்லை. அண்ணன் ரமேஸீடம் நீலவானின் நிர்வாண மேனியின் ஆயிரம் நட்சத்திரங்களில் ஒன்றாய் அவளும் கண் சிமிட்டிக் கொண்டிருக்கிறாள். மலேரியா வடிவில் வந்த காலன் அரசு விதித்த மருத்துவத் தடையைச் சாதகமாக்கி சிறந்ததொரு வன்னியின் மருத்துவமாதைக் காவு கொண்டுவிட்டான் (சுடர் ஒளி.,2005.4.17:4).

மக்களின் நடமாட்டத்தைத் தீர்மானிக்கும் அதிகார மையங்களாகச் சோதனைச் சாவடிகள் மாறின. தி.நடனசபேசனால் எழுதப்பட்ட 'அண்ணனின் பாத சுவட்டிற்காக' சிறுகதையில், போர்ச் சூழல் மற்றும் அதன் பாதிப்புகள் விரவிக்கிடக்கின்றன. கதையின் தொடக்கத்திலேயே சந்திக்குச் சந்தி இருக்கும் இராணுவச் சோதனைச் சாவடிகள், அடையாள அட்டை இல்லாவிட்டால் ஏற்படும் பதற்றம் போன்றவை வெளிப்படுத்தப்படுகின்றன. 'தாய்மடி' என்ற சிறுகதையில், விக்ரம் ஓமந்தைச் சோதனைச் சாவடியை வேனில் கடக்கும்போது, வழியெங்கும் போரினால் சிதைந்த நிலப்பரப்புகளைப் பார்க்கிறான். முன்பு பசுமையாக இருந்த கிராமம், இப்போது 'திலகம் இழந்த விதவை போல' பொலிவிழந்து காணப்படுவதாக ஆசிரியர் குறிப்பிடுவது போருக்குப் பிந்தைய அடையாளச் சிதைவை உணர்த்துகிறது.

முடிவுரை

சுடர் ஒளி பத்திரிகையில் வெளிவந்த சிறுகதைகளை மையமாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இவ்வாய்வு, ஈழப்போர், ஓர் அரசியல் அல்லது இராணுவ நிகழ்வு மட்டுமல்ல. அது ஒரு சமூகத்தின் முழுமையான வாழ்வியல் அமைப்பையே சிதைத்த மனிதாபிமானமற்ற பேரழிவு என்பதைத் தெளிவுபடுத்துகிறது. இச்சிறுகதைகள்,

போரின் தாக்கத்தைப் பெருநிலை அரசியல் மொழியில் அல்லாது, சாதாரண மனிதர்களின் அன்றாட அனுபவங்கள், வலிகள், இழப்புகள், மௌனக் கண்ணீரின் வழியாகப் பதிவுசெய்கின்றன.

இலங்கை அரசின் இன அடக்குமுறைகள், மொழி மற்றும் அரசியல் உரிமை மறுப்புகள், யுத்தத்தின் தொடர் விளைவான இடம்பெயர்வுகள், படுகொலைகள் தமிழர் சமூகத்தின் அன்றாட வாழ்க்கையை எவ்வாறு ஆழமாகப் பாதித்தன என்பதனை இச்சிறுகதைகள் தெளிவாக வெளிப்படுத்துகின்றன. குறிப்பாக, 2000 - 2005 ஆண்டு காலப்பகுதியில் வெளிவந்த கதைகள் போரின் தாக்கங்களை நேரடி அனுபவங்களுடனும் உணர்வியல் ஆழத்துடனும் பதிவுசெய்துள்ளன. இதனால், இச்சிறுகதைகள் வெறும் கற்பனைப் படைப்புகளாக அல்லாது, போர்க்கால சமூகத்தின் வரலாற்றுச் சான்றுகளாகவும் நினைவுப் பதிவுகளாகவும் விளங்குகின்றன என்பதனை இவ்வாய்வு உறுதிப்படுத்துகிறது.

சுடர் ஒளி பத்திரிகை செய்தி ஊடகமாக மட்டுமல்லாமல், போரால் பாதிக்கப்பட்ட மக்களின் குரலாகவும் செயல்பட்டுள்ளது. அச்சுறுத்தல்கள் மற்றும் அரசியல் கட்டுப்பாடுகள் நிலவிய காலகட்டத்திலும், தமிழ் மக்களின் துயரங்களையும் எதிர்ப்புணர்வுகளையும் இலக்கிய வடிவில் உலகறியச் செய்த ஊடகமாக அது திகழ்ந்துள்ளது. அகதி வாழ்க்கை, உறவிழப்பு, பொருளாதார நெருக்கடி, தமிழர் கல்வி எதிர்நோக்கிய இடர், உளவியல் பாதிப்பு, அடையாளச் சிதைவு போன்ற பல்வேறு வாழ்வியல் சிக்கல்கள் இக்கதைகளின் மையப்பொருள்களாக அமைந்துள்ளன. போரின் அரசியல் பரிமாணங்களைவிட அதன் மனிதநேய விளைவுகளே கதைகளில் அதிக முக்கியத்துவத்துடன் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

உசாத்துணை நூற் பட்டியல் References

அருணாசலம்,க. (2020). ஈழத்துத் தமிழ்ச் சிறுகதைகள். குமரன் புத்தக இல்லம். கொழும்பு.

குணராசா,க. (2001). ஈழத்துச் சிறுகதை வரலாறு. ஆனந்தா அச்சகம், யாழ்ப்பாணம்.

சிவகுருநாதன், இ. (2001). இலங்கையில் தமிழ்ப் புதினப் பத்திரிகையின் வளர்ச்சி. கொழும்புத் தமிழ்ச் சங்கம். கொழும்பு.

செல்வராஜா, என். (2014). ஈழத் தமிழர் போர்க் காலம். அகிலன் அசோஷியேற்ஸ். கனடா.

ஞானசேகரன், தி. (2012). ஈழத்துப் போர் இலக்கியச் சிறப்பிதழ். ஞானம் சஞ்சிகை. யுனி ஆர்டஸ் (பிறைவேட்) லிமிட்டட். கொழும்பு.

றமீஸ் அப்துல்லா. (2012). இலங்கைத் தமிழ்ப் பத்திரிகைகள். குமரன் புத்தக இல்லம். கொழும்பு.